1984 மார்ச் 10]

திரு. இரா. சா. முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையின் மீது ஒருசில கருத்துக்களைக் கூறலாம் என்று நான் முற்படுகிறேன்.

நம்முடைய நிதிநிலை அறிக்கையில் உடல் ஊனமுற்றவர்களுக்காக அரசின் சார்பிலே குழுக்களை அமைத்து அவர்களுக்கு நன்மை செய்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே அவர்களுக்காக ஒரு குழுவினையே அமைக்கின்ற அரசாக இன்றையதினம் இந்த அரசு விளங்குகின்றது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தான் இதுபோன்ற திட்டத்தை, அதாவது உடல் ஊனமுற்றவர்களுக்கான திட்டத்தை, அரசின் மூலமாக ஒரு குழுவினை அமைக்கின்ற நல்ல திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் கொண்டு வந்திருப்பதால் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. சா. முனிரத்தினம் அவர்கள் 12-3-84 திங்கட்கிழமை அன்று தொடர்ந்து பேசலாம்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 12-3-84 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

119. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான முப்பத்தி நான்காவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் I/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS